18 மைல்கள்தான் உள்ளது. அதற்கு இருப்புப்பாதை போடச் சர்க்கார் ஏற்பாடு செய்வார்களா ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : மன்னார்குடி—திருத்துறைப் பூண்டி பாதை சர்வே செய்யப்பட வேண்டுமென்றுதான் பரிந்துரை செய்யப்பட்டிருக்கிறது. அது சர்வே செய்யப்பட்ட பிறகு மன்னார்குடியிலிருந்து பட்டுக்கோட்டைக்கு இணைப்புப் பாதை போட ஏற்பாடு செய்யலாம்.

திரு. ஆர். நாகசுந்தரம் : மத்திய சர்க்காரில் உள்ள ரெயில்வே அமைச்சகம் மாநில அரசின் சிபார்சு மீதுதான் புதுப் பாதைகளை அமைக்குமா ? இந்தச் சர்க்காரில் உள்ள ரெயில்வே மந்திரி யார் ?

மாண்புமிகு திரு. மு. கருணாநிதி : இங்கு ரெயில்வே மந்திரி இல்லை—போக்குவரத்து மந்திரிதான்.

மதுரை மாவட்டத்தில் பழரச ஆராய்ச்சிப் பண்ணை

* 38 வினா.—**திரு. கரு. சீமைச்சாமி :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) மதுரை மாவட்டத்தில் பழரச ஆராய்ச்சிப் பண்ணை ஆரம்பிக்கும் திட்டம் அரசாங்கத்தின் பரிசீலனையிலுள்ளதா?

(இ) ஆம் என்றால் எந்த இடத்தில்?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : (அ) இல்லை, ஐயா.

(இ) இக் கேள்விக்கு இடமில்லை.

DR. H. V. HANDE : Is there any other Fruit Research Farm in any place in the Madras State?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : தமிழகத்தில் மூன்று இடங்களில் பழ ஆராய்ச்சி நிலையங்கள் இருக்கின்றன. அவை (1) திம்மாவரம், (2) பெரியகுளம், (3) கூனூர்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மதுரை மாவட்டத்தில் பழத்தைப் பக்குவப்படுத்தும் தொழிற்சாலை ஆரம்பிக்கும் உத்தேசம் உண்டா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதுபற்றித் தனிக் கேள்வி கேட்கவும்.

கோழி அபிவிருத்தித் திட்டம்

* 39 வினா.—**திரு. வை. சுவாமிநாதன் :** மதிப்பிற்குரிய விவசாய அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

கோழி அபிவிருத்தித் திட்டத்தை எடுத்துவிடும் உத்தேசம் ஏதேனும் பரிசீலனையிலுள்ளதா ?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : இல்லை, ஐயா.

1967 ஜூன் 20]

திரு. வை. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, கோழிகள் ராணிக்கட் வியாதியால் ஏராளமாக இறந்து விடுகின்றன. அதைத் தடுக்க அரசு ஏதாவது நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : வியாதியைத் தடுக்க தடுப்பு ஊசிகள் போடப்படுகின்றன. அதன் மூலமாக வியாதி தடுக்கப்படுகிறது.

திரு. செ. பாலசுப்பிரமணியன் : அரசினர் கோழிப் பண்ணை களில் கோழிகளுக்கு ராணிக்கட் வியாதி வந்து நூற்றுக்கணக்கான கோழிகள் இறந்து விட்டன என்று மாதந்தோறும் கணக்கு எழுதப்படுகிறது. ஒவ்வொரு மாதத்திலும் ஒரு குறிப்பிட்ட தேதியில்தான் அம்மாதிரி எழுதப்படுகிறது. அதைப்பற்றி விசாரணை செய்து அதைத் தடுக்க நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : கோழி அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் பல தவறுகள் நடப்பதைக் கண்காணிக்க மூன்று பேர்கள் அடங்கிய ஒரு கமிட்டி போடுவதாக அரசாங்கம் யோசித்துக் கொண்டிருக்கிறது.

திரு. மு. ச. சிவசாமி : தலைவர் அவர்களே, முந்தைய அரசாங்கத்திடம் தங்களுக்கு இருந்த செல்வாக்கை உபயோகப்படுத்தி, கோழிப் பண்ணைத் திட்டத்தின் பெயரால் 1,000 ரூபாய், 5,000 ரூபாய் வாங்கி கோழிப் பண்ணை வைக்காமல் இருப்பதால், இப்போதைய அரசாங்கம் அவர்கள் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க முன்வருமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : அதைப்பற்றித் தகவல் கொடுத்தால் தகுந்த நடவடிக்கை எடுக்கலாம்.

திரு. ரா. கிருஷ்ணசாமி கவுண்டர் : தலைவர் அவர்களே, கோழிப் பண்ணைத் திட்டம் எங்கும் அநேகமாகத் தோல்வியாகி இருக்கிறது என்பதை ஒவ்வொருவரும் உணர்வார்கள் என்று நம்புகிறேன். அரசாங்கத்தில் நடத்தப்படுகிற கோழிப்பண்ணைகளில் அந்தந்தப் பண்ணையில் உற்பத்தி செய்கிற முட்டைக்கு என்ன செலவு ஆகிறது என்று கணக்குக் கொடுக்க முடியுமானால் நன்றாக இருக்கும் என்று கருதுகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: நான் ஆரம்பத்தில் வேறு ஒரு கேள்விக்குப் பதில் அளித்த பிரகாரம், அதிகாரப் பற்றற்ற மூன்று உறுப்பினர்களைக் கொண்ட கமிட்டி போட உத்தேசிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் அறிக்கை கொடுத்த பிறகு நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. எம். எஸ். மணி : தலைவர் அவர்களே, இந்தக் கோழிப் பண்ணை வைக்கக் கடன் வாங்கியவர்கள் அந்தக் கடனைக் கழிக்க, தினசரி அவர்களுக்குக் கிடைக்கும் முட்டைகளைப் பண்ணையில்

[1967 ஜூன் 20

கொடுக்க வேண்டுமென்று இருப்பதாகத் தெரிகிறது. ஆனால், அப்படிக் கொடுப்பதில்லை. அப்படிக் கொடுக்காமல் இருக்க என்ன காரணம் என்று கவனித்து அரசாங்கம் நடவடிக்கை எடுக்குமா?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: யார் கடன் பெற்றார்கள், யார் திருப்பித் தரவில்லை என்ற முழுத் தகவல் கொடுத்தால் அது பற்றித் தகுந்த நடவடிக்கை எடுக்கப்படும்.

திரு. கே. விநாயகம்: தலைவர் அவர்களே, இந்த அரசாங்கம் நடத்துகிற கோழிப் பண்ணைகளில் பெரும்பாலும் அதிகாரிகள் அதிகமாக வைக்கப்பட்டு, தீனி போட ஒரு அதிகாரி, முட்டையின் சைஸ் பார்க்க ஒரு அதிகாரி, தரவாரியாகப் பிரிக்க ஒரு அதிகாரி, என்று பலரை வைத்திருப்பதால், மொத்தமாகக் கணக்கிடுவதிலே ஒரு கோழி முட்டையின் விலை 1½ ரூபாய் ஆகிறது என்று கலெக்டர் ஒருவர் அறிக்கை வெளியிட்டிருக்கிறார். வெளியே 25, 30 பைசாக்களுக்கு நல்ல முட்டை கிடைக்கிறது. இந்தத் திட்டத்தில் என்ன கோளாறு இருக்கிறது, இதை எப்படித் திருத்தி அமைக்க முடியும் என்று ஆராய்ந்து பார்த்திருக்கிறார்களா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை: கனம் உறுப்பினர் சொன்னபடி இந்தத் திட்டத்திற்குத் தேவையற்ற பல அதிகாரிகள் நியமிக்கப்பட்டிருக்கிறார்கள் என்பதைக் கனம் உறுப்பினர் ஒத்துக் கொண்டதில் நான் மெத்த மகிழ்ச்சி அடைகிறேன். ஆனால், அதை அவர்கள் தொடர்ந்து, அதற்கான ஆட்குறைப்புச் செய்கிற நேரத்தில் சபையிலேயோ, வெளியிலேயோ, தனியாகவோ, கூட்டாகவோ எதிர்ப்புத் தெரிவிக்காமல் இருக்கும் பொருத்தத்தை அவர்கள் கையாள வேண்டுமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. ஆலடி அருணா: தமிழகத்தில் பல்வேறு இடங்களில் கோழிப் பண்ணைகள் அபிவிருத்திக்காக 20 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டிருக்கிறது. தணிக்கை செய்த குழு கோழிப்பண்ணைகள் பற்றிக் கொடுத்திருக்கும் குறிப்பை கவனத்தில் கொண்டு அரசு என்ன நடவடிக்கை எடுத்து இருக்கிறது என்று அறிய விரும்புகிறேன்.

'On this basis, the private breeders, to whom full assistance had been given, should have supplied up to June 1966, to the marketing centres 43.35 lakhs eggs and 1.39 lakhs birds; the number actually supplied was, however, 6.30 lakhs eggs and 3,213 birds only. . . .

அதன்மீது அரசாங்கம் என்ன நடவடிக்கை எடுத்திருக்கிறது?

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி: கோழிப் பண்ணைத் திட்டத்திலே பல தவறுகள் இருப்பதாகவும், கூடுதலாகச் செலவு செய்யப்படுவதாகவும், திரு. விநாயகம் அவர்கள் ஒத்துக்கொண்டபடி அதிகப்படியான அதிகாரிகள் இருப்பதாகவும் சொல்லப்பட்ட காரணத்தினால்தான் அதிகாரப் பற்றற்ற உறுப்பினர்கள் கொண்ட கமிட்டி ஒவ்வொரு கோழிப் பண்ணைக்கும் சென்று வேண்டிய

1967 ஜூன் 20]

விவரம் சேகரித்து அறிக்கை தருவார்கள். அவர்களுடைய அறிக்கைக்குப் பிறகு என்ன நடவடிக்கை எடுக்கலாம் என்று யோசிக்கப்படும்.

திரு. டி. எஸ். ஆதிமூலம் : தலைவர் அவர்களே, மோட்டாரில் போகும்போது கோழிப் பண்ணைகளைப் பார்த்தால் சில கட்டடங்கள், டில்லியில் உள்ள அசோகா ஹோட்டல் மாதிரித் தெரிகின்றன. ஏர்கண்டிஷன் செய்த இடங்கள் இருக்கின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. ஏ. கோவிந்தசாமி : ஏர் கண்டிஷன் செய்த இடங்களும் உண்டு—செங்கற்பட்டு மாவட்டத்தில் அதிகம்.

Cinema Industry

* 40 Q.—THIRU K. VINAYAKAM : THIRU MUNU. ADHI : } Will the Hon. the Minister for Harijan Welfare and Information be pleased to state :

(*a*) whether there is any proposal to nationalise cinema industry in the State of Madras; and

(*b*) if so, in what stages?

மாண்புமிகு டாக்டர் (திருமதி) சத்தியவாணிமுத்து : இப்பொழுது இல்லை.

(b) வினவிற்கு இடமில்லை.

திரு. கே. விநயகம் : பொதுவாக இந்த சினிமா தொழிலில் இருப்பவர்கள் அதிகமான பணத்தைக் கொடுத்து, அதிகமான பணத்தையும் வாங்கி, அவைகளைப்பற்றியெல்லாம் சரிவர கணக்கு வைக்காமல் அரசாங்கத்தையும் ஏமாற்றி, மற்றும் இப்பேர்ப்பட்ட தகராறுகள் ஏற்படாமல் இருப்பதற்கு, இப்பேர்ப்பட்ட நல்ல தொழில்—அதிலும் சினிமா தொழிலில் வருகிற வருவாய் ஏராளமாக இருக்கிறது என்று சொல்லிக் கொண்டிருக்கிறார்கள்—அரசாங்கமே எடுத்து நடத்தினால் இப்பேர்ப்பட்ட சிக்கல்களுக்கு இடம் இல்லாமல் இருப்பதோடுகூட, மற்றும் அரசாங்கத்திற்கு அதிக லாபம் வரும் என்று கருதப்படுவதால் இதுபற்றி அரசு பரிசீலித்திருக்கிறதா?

மாண்புமிகு திரு. சி. என். அண்ணாதுரை : கனம் உறுப்பினர் அவர்கள் சினிமாத் தொழிலைத் தேசியமயமாக்க வேண்டும் என்று நாங்கள் சொன்னதாகக் கருதிக்கொண்டு பேசுகிறார்கள். சினிமாக் கொட்டகைகளை தேசீயமயமாக்கவேண்டும் என்பது தான் நாங்கள் சொல்லியிருப்பது. சினிமாத் தொழிலையே தேசீயமயமாக்கலாமா என்றால், சினிமாத் தொழில் என்பது இரண்டு பகுதி ஒன்று ஸ்டூடியோ வைப்பது. இன்னொன்று சினிமாவில் நடிப்பது. கனம் உறுப்பினர் அவர்கள் அதற்கு வரமாட்டார்கள் என்று நான் கருதுகிறேன். ஏனென்றால், அப்படி அவரும் நானும் நடித்துப் படமெடுத்து சர்க்காருடைய கணக்கில் நஷ்டத்தை எழுதுவதில் எந்த